[1984 மார்ச் 7

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : தலைவரவர்களே, நான்கீழக்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பயணிப் பேருந்துகள் ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1984) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஆ) சென்னை மாநகரக் காவல், தமிழ்நாடு மாவட்டக் காவல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1983

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ''ஆளுநர் அவர்களால் 16–12–1983 ஆம் தேதியன்றுபிறப்பிக்கப் பெற்ற 1983ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல், தமிழ்நாடு மாவட்டக் காவல் (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசர சட்டம் எண் 16/1983) இப்பேரவை நிராகரிக்கிறது''. என்ற தீர்மானத்தை திருவாளர்கள் ப. பொன்னுரங்கம், அ. ரகுமான்கான், கு.பா. பழனியப்பன் ஆகியோர் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இத்தீர்மானத்தை மொழிவர்,

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, என் பெயரால் கொடுக்கப்பட்டிருக்கக் கூடிய கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்:

''ஆளுநர் அவர்களால் 16—12—1983 ஆம் தேதியன்று பிறப்பிக்கப் பெற்ற 1983 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல்; தமிழ்நாடு மாவட்டக் காவல் (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 16/1983) இப்பேரவை நிராகரிக்கிறது''.

திரு. ப. பொன்னுரங்கம் : இத்தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு திரு. சி பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;

''1983 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல், தமிழ்நாடு மாவட்டக் காவல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரகுமான்கான் அவர்களுடைய தீர்மானமும் மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களுடைய தீர்மானமும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன; இதன்மீது விவாதம் மாலையில் தொடரும்.

TRUTH ALONE TRIUMPHS